# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I
8069852

C

1. District : மாவட்டம் புதுக்கோட்டை PS: காவல்நிலையம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை Year ஆண்டு 2020 FIR No. மு.த.அ. எண் 06/2020 Date நாள் 07-11-2020

2. (i) Act சட்டம்: CrPC and PC (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: 102 CrPC r/w. 7 of Prevention of Corruption (Amendment) Act 2018.
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 06-11-2020 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 18.55 hrs Time to : நேரம் வரை 22.00 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07-11-2020 Time : நேரம் 00.15 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சார்பதிவாளர் அலுவலகம், கறம்பக்குடி, 40 km, வடகிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. இமரப்பன் (b) Father's/ Husband's Name : தந்தை /~~கணவர்~~ பெயர் சுப்பையா
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனிவட்டாட்சியர் / [illegible] ஆய்வுக்குழு அலுவலர், [illegible] பாதுகாப்பு திட்டம், புதுக்கோட்டை (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. பாரதிதாசன், 56/2020, S/o. பழனியாண்டி, உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கறம்பக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps -2 3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

கைப்பற்றப்பட்ட பணம் ரூ. 21,000/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்பட்டது:</u>

கடந்த 06–11–2020ம் தேதி புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு குழு அலுவலரும், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு பார்ட்டியினரும் சேர்ந்து மாலை 06.55 மணி முதல் 22.00 மணி வரை புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து ஆய்வு குழு அலுவலர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:– அனுப்புநர் திரு.குமரப்பன், வயது 58/ 2020, த / பெ. சுப்பையா, தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், புதுக்கோட்டை மற்றும் ஆய்வுக்குழு அலுவலர், புதுக்கோட்டை, பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை, அய்யா, இன்று (06–11–2020)ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 06.55 மணிக்கு புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி கிழக்கு மேற்காக செல்லும் கச்சேரி வீதியில் வடக்கு புறமாக தெற்கு பார்த்த வாயிலுடன் தரைத்தளத்துடன் மட்டும் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தை ஆய்வுக்குழு ஆய்வாளராகிய என் முன்னிலையில், திரு.நா.ஞானசேகர்,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 7/11/2020 | V. [signature] 07/11/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07-11-2020.

Name: பெயர் V. தமிழ்ச்செல்வி
Rank: நிலை காவல் ஆய்வாளர் No எண்
ஊ.த.க.பிரிவு
புதுக்கோட்டை

மண்டல துணை வட்டாட்சியர், அன்னவாசல், இலுப்பூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் ஆகியோர் தலைமையில் புதுக்கோட்டை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.வி.தமிழரசி மற்றும் காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.கோ.மணிகண்டன் முன்னிலையில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

திடீர் சோதனையின் போது கறம்பக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் தரைத்தளத்தில் உள்ள தெற்கு பக்கம் நுழைவாயில் கொண்ட சார் பதிவாளர் அலுவலகத்தின் முன் காம்பௌண்டிற்குள் தனது ஸ்கூட்டி டி.எண்.49 சிபி 0194 என்ற வாகனத்தை எடுக்க முயன்றவரை நிறுத்தி தணிக்கை குழுவினர் விசாரித்த போது அவர் சார் பதிவாளர் திரு.பாரதிதாசன், த/பெ பழனியாண்டி என தெரிய வந்ததால் அவரை அலுவலகத்திற்குள் அவரது அறைக்கு அழைத்து வந்த போது அங்கு 2) திரு.பி.சரத்குமார், த/பெ பாலகிருஷ்ணன், ஒல்டு வால்யூம் ஸ்கேன் ஆப்ரேட்டர் 3) திரு.வெங்கட் பிரசன்னா, த/பெ முருகையன், கேமரா ஆப்ரேட்டர், 4) திரு.முருகன், த/பெ துரைச்சாமி, அலுவலக இரவு காவலர் ஆகியோர் நின்று கொண்டிருந்தனர். மேற்படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த அரசு அலுவலர்களிடம் திடீர் தணிக்கை குழுவினர் தங்களை அறிமுகம் செய்து கொண்டு திடீர் ஆய்வு மேற்கொள்ள வந்த விபரத்தை கூறி திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

திடீர் ஆய்வின் போது சார்பதிவாளர் (பொறுப்பு) திரு.பாரதிதாசன் என்பவரை சோதனை செய்ய அவர் அணிந்திருந்த சந்தன நிற பேண்டின் பின்புற இடது பக்க பாக்கெட்டில் இருந்து ஆஜர்படுத்திய காக்கி நிற கவரில் ரூ.13,000/–ம் இருந்தது. மேலும் அவரது மணிபர்ஸில் ரூ.635/– இருந்தது. மேற்கண்ட பணத்திற்கு அவரிடம் விளக்கம் கேட்க அவர் தான் காலையில் அலுவலகத்திற்கு வரும் போது வீட்டில் இருந்து ரூ.1,150/– கொண்டு வந்ததாகவும், அதில் அலுவலக சென்செட்டிற்கு (ஜெனரேட்டர்) 4 லிட்டர் டீசல் வாங்கிய செலவு ரூ.307/–என்றும், சாப்பாடு மற்றும் இதர செலவு ரூ.208/– என்றும் சொன்னார். அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் சார்பதிவாளர் சொன்னபடி சரியாக இருந்ததால் ரூ.635/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் ரூ.13,000/– பற்றி கேட்க மேற்படி பணம் பத்திர எழுத்தர் திரு.சுப்ரமணி என்பவர் 4 பத்திரம் பதிந்ததற்காக ரூ.5000/–ம், பத்திர எழுத்தர் திரு.முருகேசன் என்பவர் 3 பத்திரம் பதிந்ததற்காக ரூ.8,000/–ம் ஆக மொத்தம் ரூ.13,000/– கொடுத்ததாக கூறினார். பின்னர் தானாக முன்வந்து ரூ.8,000/– ஒல்டு வால்யூம் ஸ்கேன் ஆப்ரேட்டர் திரு.சாத்குமார் என்பவரிடம் கொடுத்து வைத்திருப்பதாகவும், அந்தப்பணம் குறித்து சரியான முகாந்திரம் கூறவில்லை. இது

சம்மந்தமாக இன்று திடீர் தணிக்கை குழு அலுவலர் முன்னிலையில், எழுத்து மூலமான வாக்குமூலம் பெறப்பட்டு அதில் கையொப்பம் பெறப்பட்டது. மேலும் தணிக்கை குழு அலுவலர்களாலும் கையொப்பம் செய்யப்பபட்டது.

திரு.பி.சரத்குமார், த/பெ பாலகிருஷ்ணன், ஒல்டு வால்யூம் ஸ்கேன் ஆப்ரேட்டர் என்பவரை சோதனை செய்ய அவர் தான் அணிந்திருந்த வெள்ளை நிற பேண்டின் வலதுபுற பின் பாக்கெட்டிலிருந்து காக்கி நிற அலுவலக கவரில் ரூ.7,500/-ம், தனியாக ரூ.500/-மாக ஆஜர்படுத்தினார். மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க அவர் இன்று பகல் 11.00 மணிக்கு தான் அலுவலகத்தில் இருந்த போது உதவியாளர் பொறுப்பு சார் பதிவாளர் திரு.பாரதிதாசன் அவர்கள் மேற்படி பணத்தை வைத்திருக்கும்படி தான் ஆஜர்படுத்தியவாறே கொடுத்ததாகவும் கூறினார். மேலும் அலுவலகத்தில் உள்ள தனிநபர் பண இருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் ரூ.200/- கையிருப்பு வைத்திருந்ததாக பதிவு செய்தது பற்றி கேட்க, அவர் தன்னுடைய இருசக்கர வாகனத்திற்கு இன்று மதியம் ரூ.200/-க்கு பெட்ரோல் போட்டுவிட்டதாகவும் அதனால் தன்னிடம் வேறு பணம் இல்லை என்றும், இது சம்மந்தமாக இன்று திடீர் தணிக்கை குழு அலுவலர் முன்னிலையில், எழுத்து மூலமான வாக்குமூலம் பெறப்பட்டு அதில் கையொப்பம் பெறப்பட்டது. மேலும் தணிக்கை குழு அலுவலர்களாலும் கையொப்பம் செய்யப்பபட்டது.

திரு.வெங்கட் பிரசன்னா, த/பெ முருகையன், கேமிரா ஆப்ரேட்டர் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.320/- இருந்தது. இது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க அவர் இன்று காலை அலுவலகத்திற்கு வரும் பொழுது தான் கொண்டு வந்தது என்றும், அதில் தனது மணிபர்ஸில் ரூ.260/- வைத்திருந்ததால் அதை மட்டும் தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவு செய்ததாகவும், பேண்ட் பாக்கெட்டிலிருந்த பணம் ரூ.60/-ஐ ஞாபக மறதியாக பதிவு செய்யாமல் இருந்துவிட்டதாகவும் கூறினார். எனவே அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.320/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இது சம்மந்தமாக இன்று திடீர் தணிக்கை குழு அலுவலர் முன்னிலையில், எழுத்து மூலமான வாக்குமூலம் பெறப்பட்டு அதில் கையொப்பம் பெறப்பட்டது. மேலும் தணிக்கை குழு அலுவலர்களாலும் கையொப்பம் செய்யப்பட்டது.

திரு.முருகன், த/பெ துரைச்சாமி, அலுவலக இரவுக்காவலர் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.70/- இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க அவர் இன்று காலை அலுவலகத்திற்கு வரும் பொழுது வீட்டிலிருந்து செலவுக்காக ரூ.90/- எடுத்து வந்ததாகவும், அதில் இன்று ரூ.20/-க்கு டீ சாப்பிட செலவு செய்ததாக கூறினார். தனிநபர் கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்ட போது அதில் கையிருப்பு ரூ.90/- என்று பதிவு செய்யப்பட்டிருந்தது. அதனால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி

பணம் ரூ.70/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இது சம்மந்தமாக இன்று திடீர் தணிக்கை குழு அலுவலர் முன்னிலையில், எழுத்து மூலமான வாக்குமூலம் பெறப்பட்டு அதில் கையொப்பம் பெறப்பட்டது. மேலும் தணிக்கை குழு அலுவலர்களாலும் கையொப்பம் செய்யப்பபட்டது.

மேலும் உதவியாளர் / பொறுப்பு சார்பதிவாளர் திரு.பாரதிதாசன் என்பவரிடம் மற்ற பணியாளர்கள் குறித்து விளக்கம் கேட்க மாவட்ட பதிவாளர் (பயிற்சி) திருமதி.இயலரசி என்பவர் பயிற்சி நேரம் முடிந்ததால் பகல் 02.00 மணிக்கு சென்றுவிட்டதாகவும், மற்றொரு உதவியாளர் திரு.சேதுராமகிருஷ்ணன் வேறு பணியாக குளத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருப்பதாகவும், டிசிஎஸ் நிறுவனத்திலிருந்து டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக வேலை பார்க்கும் திருமதி.ராதிகா என்பவர் தனது சின்னம்மா இறந்துவிட்டதாக கூறி தன்னிடம் அனுமதி பெற்று மாலை 05.00 மணிக்கு சென்றுவிட்டதாக கூறினார்.

மேலும் தணிக்கை குழு சார் பதிவாளர் (பொறுப்பு) திரு.பாரதிதாசன் அவர்களிடம் இன்றைய தினம் (06.11.2020) பதிவு செய்த ஆவணங்களை பற்றி கேட்க இன்று 8 கிரைய ஆவணங்கள், 1 தான செட்டில்மெண்ட், 1 உரிமை ஆவண ஒப்படைப்பு, 1 கிரைய உடன்படிக்கை உட்பட மொத்தம் 11 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாக தெரிவித்தார். அதற்குரிய கணக்குபட்டியலை கேட்க அவர் கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து ஆஜர் செய்தார். மேலும் 2020ஆம் ஆண்டிற்கான அலுவலக வருகைபதிவேடு, ஒப்பந்த பணியாளர்கள் வருகைப்பதிவேடு-3, தொகுதி எண்.19 இயக்குப்பதிவேடு, பார்வையாளர் பதிவேடு, தொகுதி-8 தனிநபர் பண இருப்பு பதிவேடு, தொகுதி-75 தற்செயல் விடுப்பு மற்றும் ஈடு செய்யும் விடுப்பு பதிவேடு மற்றும் "அ" கணக்கு பதிவேடு தொகுதி-65 ஆகியவற்றை ஆஜர் செய்தார்.

மேலும் மேல் நடவடிக்கைக்காக மேற்கண்ட பத்து ஆவணங்களும், உதவியாளர் பொறுப்பு சார் பதிவாளர் திரு.பாரதிதாசன் என்பவரிடமிருந்த கணக்கில் வராத பணம் ரூ.13,000/- மற்றும் திரு.பாரதிதாசன் கொடுத்ததாக கூறி திரு.சரத்குமார் வைத்திருந்த கணக்கில் வராத பணம் ரூ.8,000/- ஆக மொத்தம் ரூ.21,000/-ம் கைப்பற்றப்பட்டது. எனவே மேற்படி பணம் கைப்பற்றப்பட்ட கறம்பக்குடி சார்பதிவாளர் (பொறுப்பு) திரு.பாரதிதாசன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் (திரு.குமரப்பன், தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், புதுக்கோட்டை).

Sir, Received this complaint and registered a case in Pudukkottai V&AC CrNo.06/2020 u/s 102 Cr.P.C r/w 7 of PC Amendment Act-2018 against Tr.Bharathidasan, Assistant, I/c Sub-Registrar, Karamabakudi

Sub Registrar Office, Pudukkottai on 07.11.2020 at 00.15 hrs (S/d V.TAMIZHARASHI, Inspr., V&AC, Pudukkottai. Dt.07.11.2020)

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் மற்றும் திடீர் ஆய்வு அறிக்கையையும் புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்பட்டது.

V. Tamizharashi
Inspr. / V&AC / Pk.
(V. TAMIZHARASHI)
07-11-2020.